# யாழ்ப்பாண மாவட்டத்தின் கைத்தறி நெசவாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

**அ.ருசியா பானு.மு.ச., குலராஜசிங்கம்.ப.**

*மனைப்பொருளியல் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

கைத்தறி உபகரணங்களைக் கொண்டு நூல் நூற்று புடவைகளாக மாற்றியமைக்கும் தொடர் செயற்பாடு கைத்தறி நெசவு என அழைக்கப்படுகின்றது. இத்தொழில் துறையானது குறைந்த மூலதனம், குறைந்த உற்பத்திச் செலவு மற்றும் சூழல் நேயம் கொண்ட ஒரு குடிசைக் கைத் தொழிலாக விளங்குவதுடன், தன்னகத்தே ஏராளமான கைத்தறி நெசவு சார்ந்த தொழில் வாய்ப்புக்களையும் அதிக அளவிலான ஊழியர் படையினரையும் கொண்ட தொழிற்துறையாகவும் விளங்குகின்றது. இலங்கையின் பொருளாதாரத்தில் 5% தொழில் வாய்ப்பினைக் கொண்டு விளங்கிய யாழ்ப்பாண மாவட்டத்தின் அரச கைத்தறி நெசவுத் தொழில்துறை 1977 ஆம் ஆண்டு இலங்கையில் அமுலாக்கப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையினால் வீழ்ச்சி அடைந்தது. இவ்வாறு வீழ்ச்சியுற்ற யாழ்ப்பாண மாவட்டத்தின் அரச கைத்தறி நெசவுத் தொழிற்துறையானது 1980களின் பிற்பகுதியில், வடபகுதியில் தொடர்ச்சியாக நடைபெற்ற உள்நாட்டு போரினால் மேலும் பலவீனம் அடைந்தது. அதனடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்தின் கைத்தறி நெசவாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காண்பதே ஆய்வின் பிரதான நோக்கமாகும். யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள பத்து கைத்தறி நெசவு உற்பத்தி நிலையங்களும் அங்கு பணியாற்றும் முப்பது நெசவாளர்களும் ஆய்வு மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. ஆய்வின் போது வினாக்கொத்து, சம்மந்தப்பட்டவர்களுடனான நேரடி உரையாடல் மற்றும் நேரடி அவதானம் போன்றன முதலாம் நிலைத்தரவுகளாகவும் கைத்தறி நெசவு சார்ந்த நூல்கள், ஆய்வறிக்கைகள், இணையத்தளம் மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தின் கைத் தொழிற்துறைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ஆண்டறிக்கைகள் போன்றன இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் சேகரிப்பட்டு பண்புசார் முறையியல் தரவுப்பகுப்பாய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இத்தரவு அடிப்படையில் பணியாற்றும் 80% நெசவாளர்கள் நாற்பத்தைந்து வயதிற்கு மேற்பட்டவர்களாவர். 56% நெசவாளர்கள் 10,000 ரூபாவிற்குக் குறைவான ஊதியமே மாதவரு மானமாகப் பெறுகின்றனர். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் ஊதியம் போதாமையே யாழ்ப் பாண மாவட்டத்தின் கைத்தறி நெசவுத் தொழிற்துறை வீழ்ச்சியடைய முக்கிய காரணியாக அமைகின்றது. அத்துடன் வளப் பற்றாக்குறையும் கட்டிட வசதிபோதாமை பாதுகாப்பு 62%, களஞ் சிய வசதி 66%, அத்தியவசிய உட்கட்டமைப்பு வசதிகள் 40% போன்றன இதன் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளன. மேலும் சுற்றுப்புறச் சூழல், அலங்கார நெசவுத் தறிகளின்மை, மனித வளங்க ளின் பற்றாக்குறை, ஆசிரியர்களின் தவறான அணுகுமுறைகள், குறைந்தளவிலான மேற்பார்வை போன்றவை ஆய்வின் போது நெசவாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளாக இனங்காணப் பட்டுள்ளது. அரசானது இம் மாவட்டத்தின் கைத்தறி நெசவாளர்களுக்கு போக்குவரத்துச் சலுகை, ஊழியர் சேமலாப நிதி வழங்குதல், இளம் தலைமுறையினரை இத்தொழிற் துறையில் பயிற்று வித்தல், நெசவாளர்களது தொழிற்திறனை விருத்தி செய்தல், உட்கட்டமைப்பு வசதிகளை முழுமைப்படுத்துவதுடன் அதன் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தல், நெசவு ஆசிரியர்களுக்கான நியமனங்களை வழங்குதல், பாடசாலைக் கல்வித்திட்டத்தில் மீண்டும் கைத்தறி நெசவுப் பாடஅலகினை தொழிநுட்பப் பாடமாக அறிமுகப்படுத்துதல், கைத்தறி நெசவு தொழிற்துறை சார்ந்த கடன் திட்டங்களை வழங்குதல், அனைத்து நெசவு உற்பத்தி நிலையங்களையும் பிரதேச வாரியாக ஒன்றிணைத்து ஒரு கைத்தொழில் துறையாக செயற்படுத்துதல் போன்ற தீர்மானங்களை முன்வைப்பதன் மூலம் இம்மாவட்டத்தின் கைத்தறி நெசவாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை களைத் தீர்க்க முடியும்.

**திறவுச்சொற்கள்:** *கைத்தறி நெசவுத் தொழிநுட்பம்; குடிசைக் கைத்தொழில்; நூல் நூற்றல்; நெசவாளர்*